DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Principal Sessions Judge, Virudhunagar District at Srivilliputtur.

S.C.No.190/2022

Deposition of witness for Prosecution/Defence/Court : P.W.19

Accused absent. Petition filed and allowed.

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.நம்பிராஜன் | Caste | : |
| Father's /Husband's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the 18th day of February, 2026.

முதல் விசாரணை

நான் தற்போது மதுரை மாவட்டம் திருமங்கலம் நகர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். விருதுநகர் மாவட்டம் வெம்பக்கோட்டை காவல் நிலையத்தில் கடந்த 25.07.2022 ம் தேதி காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது மேற்படி காவல் நிலைய குற்ற எண் 178/2022 பிரிவுகள் 174(3) குவிமுச @ 302 of IPC ன்படியான வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன்.

26.07.2022 ம் தேதி இந்த வழக்கில் இறந்த நபரான காயத்ரி என்பவரது இறப்பு குறித்து கூடுதல் தகவல் அறிய பிரேத பரிசோதனை செய்த அரசு மருத்துவர் சுதன் மற்றும் வெங்கடேச பிரசன்னா ஆகியோர்களுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன்.

பின்னர் 01.08.2022 ம் தேதி இளநிலை அறிவியல் அலுவலர் தங்கவேல், வட்டார தடய அறிவியல் ஆய்வகம், இராமநாதபுரம் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 10.8.2022 ம் தேதி உதவி இயக்குநர்,

மற்றும் ஆவண நிபுணர் வேலுச்சாமி, வட்டார தடய அறிவியல் ஆய்வகம், மதுரை என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்னர் 20.08.2022 ம் தேதி இந்த வழக்கில் இறந்துபோன நபரான காயத்ரி என்பவரது இறப்பு குறித்து கூடுதல் விளக்கம் அளித்த பிரேத பரிசோதனை செய்த மருத்துவர்கள் சுதன் மற்றும் வெங்கடேச பிரசன்னா ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்னர் எனது விசாரணையிலிருந்தும் சாட்சிகளின் வாக்குமூலங்களிலிருந்தும் ஆய்வு அறிக்கைகளிலிருந்தும் எதிரி மீது குற்றம் புலனானதால் எதிரி மீது இதச பிரிவு 302 ன் படி குற்ற இறுதியறிக்கையை கடந்த 22.08.2022 ம் தேதி நீதிமன்றத்தில் சமர்ப்பித்தேன்.

பின்னர்அப்போது இந்த வழக்கில் கிடைக்கப்பெறாத மதுரை வட்டார தடய அறிவியல் ஆய்வக அலுவலர் நவநீதகிருஷ்ணன் என்பவரை கடந்த 24.04.2025 ம் தேதி விசாரித்து அவரிடம் ஆய்வறிக்கையை பெற்று அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேலும் வட்டார தடய அறிவியல் ஆய்வகம், சென்னையில் இருந்து கிடைக்கப்பெற்ற ஆய்வறிக்கையை பெற்று மேற்படி ஆய்வறிக்கையை வழங்கிய அறிவியல் அலுவலரான ரமணன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து கூடுதல் குற்ற இறுதியறிக்கையை நீதிமன்றத்தில் 20.06.2025 ம் தேதி சமர்ப்பித்தேன். என்னுடைய விசாரணையில் இராமநாதபுரம் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திலிருந்து பெறப்பட்ட **உயிரியியல் அறிக்கை அசாஆ 30** ஆகும். கடந்த 28.10.2022 ம் தேதி மதுரை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திலிருந்து பெறப்பட்ட **குருதி வடிநீரியியல் அறிக்கை அசாஆ 31** ஆகும்.

கடந்த 20.03.2025 ம் தேதி சென்னை மயிலாப்பூரில் உள்ள தடய அறிவியல் ஆய்வகத்திலிருந்து கிடைக்கப்பெற்ற இறந்துபோன காயத்ரியின் செல்போன்களை ஆய்வு செய்து வழங்கப்பட்ட **அறிக்கை அசாஆ 32** ஆகும். (எதிரி தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது.)

எதிரி தரப்பு குறுக்குவிசாரணை

மதுரை தடய அறிவியல் ஆய்வகத்திலிருந்து பெறப்பட்ட அறிக்கையில் இரத்தத்தொகுதியானது O என்றுமட்டும் தான் உள்ளது. இரத்தத்தொகுதியானது O+ or O– என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். சென்னை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு எத்தனை செல்போன்கள் ஆய்விற்கு அனுப்பப்பட்டது என்றால் 2 செல்போன்கள் அனுப்பப்பட்டது. ஆய்விற்கு அனுப்பப்பட்ட 2 செல்போன்களில் உள்ள சிம்கள் எந்த கம்பெனி என்றால் இரண்டு சிம்களும் Vodafone Idea வகையை சேர்ந்தது. ஒவ்வொரு கம்பெனிக்கும் ஒரு நோடல் ஆபிசர் இருப்பார் என்றால் சரிதான். மேற்படி சிம்கள் குறித்து அறிக்கை கேட்டு நோடல் ஆபிசர் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை.

சென்னை தடய அறிவியல் ஆய்வகத்திலிருந்து பெறப்பட்ட அறிக்கைக்காக 65 பி சான்றிதழ் ஏதேனும் பெற்று தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அறிவியல் ஆய்வக அலுவலர்கள் ரமணன் மற்றும் விசாலாட்சி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளேனா என்றால் ரமணன் என்பவரை மட்டும் விசாரித்துள்ளேன்.

காவல் துணைக்கண்காணிப்பாளர் அத்தாட்சியில் வெள்ளை நிற துண்டு ஒன்றினை கைப்பற்றியுள்ளார் என்றால் சரிதான். இராமநாதபுரம் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு நான் அனுப்பிய துண்டானது கருப்பு , வெள்ளை, சிவப்பு பார்டர் கொண்ட வெள்ளைநிற துண்டு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இரண்டும் ஒரே துண்டுதான். அத்தாட்சியில் கைப்பற்றப்பட்ட துண்டினை தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பாமல் வழக்கிற்காக வேறு ஒரு துண்டினை உற்பத்தி செய்து அனுப்பியுள்ளேன் என்றால் சரியல்ல.

நான் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் எதிரி மீது பொய்யாக குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. இறந்துபோன காயத்ரி

என்பவர் குழந்தைக்கு பால் கொடுக்கும்போது காயத்ரிக்குஇயற்கை மரணம் ஏற்பட்டு குழந்தையின் மீது சாய்ந்து அதன் காரணமாக குழந்தையும் இறந்துவிட்டது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

Principal District and Sessions Judge,
Virudhunagar District at
Srivilliputtur.